ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# எதிராசன் வாசகத்தோர் எழில் சரிதம் - 32 A

## ஸ்ரீமதுபயவே. நாவல்பாக்கம்.
## திருமலை. சதுர்வேத சதக்ரது.
## ஸ்ரீமத் அய்யா குமார தாததேசிகன்

(ஸ்ரீ உ.வே. ஸோமயாஜி நாராயண தாதயார்ய மஹாதேசிகன்)

---

"காசி முதலாய நன்னகரியெல்லாம் கார்மேனி அருளாளர் கச்சிக்கு ஒவ்வா" என்று ஸ்வாமி தேசிகன் புகழ்ந்து பேசிய பெருமாள் கோவில் என்கிற காஞ்சீபுரத்திற்கு ஸமீபத்தில் விளங்கும் சுரோத்ரியம் நாவல்பாக்கம் என்று ப்ரஸித்தமான அக்ரஹாரத்தில், விஷ்ணு வ்ருத்த கணத்தைச் சேர்ந்த சடமர்ஷண கோத்ரத்தில் இந்த பாரத தேசத்தில் மிக்க புகழுடன் விளங்கியவர்களும், தூய்மை நிறைந்தவர்களும், குண புருஷ தத்வ ஸ்திதிகளை அறிந்தவர்களும் இயற்கையிலேயே பகவானின் திருவடிகளிலேயே நிலைநின்ற மனம் உடையவர்களுமான நாத யாமுந ஸ்ரீசைலபூர்ண குருகாதீசர் போன்ற உத்தமர்களான ஆசார்யர்கள் அவதரித்த திருவம்சத்தில் ஸ்ரீநிவாஸ தாதாசார்ய ஸ்வாமியின் திருக்குமாரரான ஸ்ரீவேங்கட தேசிகனுக்கு அய்யா குமார தாததேசிகன் திருக்குமாரராக அவதரித்தார். உரிய காலத்தில் தம் பிதாவிடமே உபநயநாதி ஸம்ஸ்காரங்களைப் பெற்றார். "அங்கம் ஆறு ஐந்து வேள்வி நால் வேதம் அரும் கலை பயின்று எரி மூன்றும் செங்கையால் வளர்க்கும் துளக்கம் இல் மனத்தோர்" என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி வாழும் திருவம்சத்தில்

அவதரித்ததற்கு ஏற்ப, அங்கங்களுடன் நான்கு வேதங்களையும் நால்வகை சாஸ்த்ரங்களையும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் தம் பிதாவின் அருநிழலிலேயே கற்றார்.

தங்களுக்கு அரசர்களால் சுரோத்ரியமாகக் கொடுக்கப்பட்ட, “நாவல்பாக்கம்” எனும் அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருந்த “திம்மயாசார்யர் ஸ்வாமி”, (அய்யா குமார தாததேசிகனின் ப்ரபிதாமஹன்) காஞ்சீபுரத்தில் ஸ்ரீ வைகுண்டப்பெருமாள் ஸந்நிதி நிர்வாஹம் போன்ற காரணங்களால் சிலகாலம் பெருமாள் கோவிலிலேயே எழுந்தருளியிருக்க நேர்ந்தது. இவர்களுக்குக் குலக்ரமமாக வந்த வாசஸ்தானமான திருப்பதியிலேயே நியதமாக வசிக்காமல் அவ்வப்போது வந்து மலையப்பனை ஸேவித்துப்போவதாக இவர்கள் இருந்தனர். அதிலும் திம்மயாசார்யர் ஸ்வாமி ப்ரதி ஸம்வத்ஸரமும் தவறாமல் ஸ்ரீநிவாஸனை ஸேவித்துப்போவது வழக்கம். ஒரு ஸமயம் திம்மயாசார்யர் ஸ்வாமி திருமலைக்கு எழுந்தருளி வேங்கடவனை மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டிருந்தபோது எம்பெருமானுக்குக் கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருந்த ஸ்ரீசேஷ தீக்ஷிதர் எனும் பட்டரை அணுகி, "அடியேன் சற்று கர்பக்ரஹத்தில் ஏகாந்தமாக எம்பெருமானை ஸேவிக்க அவகாசம் ஸாதித்தருள வேணும்" என விஜ்ஞாபித்தார். அர்ச்சக ஸ்வாமி, "தேவரீர் ஏகாந்தத்தை விரும்புவானேன்?" என வினவவும், "அடியேன் இம்மண்ணுலகில் இருந்து வெகு சீக்ரம் விண்ணுலகை அடைந்து அங்கு எம்பெருமான் திருவடிகளில் அப்ரதிஹத கைங்கர்யம் புரிய ஆர்த்த ப்ரபத்தி செய்யப் போகிறேன்" என திம்மயாசார்யர் விடையிறுத்தார். இதைக்கேட்ட அர்ச்சக ஸ்வாமி, "அடியேனுக்கும் சீக்ரமாக நிரந்தர கைங்கர்யம் ப்ராப்தமாகும்படி திருவேங்கடமுடையான் திருவடிவாரத்தில் ஓர் அஞ்சலி செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, திம்மயாசார்யரும், “அப்படியே” என்று அங்கீகரித்து, பட்டர் ஸ்வாமிக்காகவும் தனக்காகவும் ஏழாவது நாளன்று அபிஜித் வேளையிலே தேஹவியோகம் ஏற்படும்படி ப்ரார்த்தித்தார். அந்த ஏழாவது நாளுக்குள் காஞ்சீபுரம் சென்றுவிடவேண்டும் என்பது ஸ்வாமியின் திருவுள்ளம். அந்தப்படிக்கு மலையப்பனிடம் நியமனம் பெற்றுக் காஞ்சிக்கு எழுந்நருளும் வழியில் ஒரு நாள் தடைப்பட்டதன் காரணமாக ஆழ்வான் அவதரித்த ஸ்தலமான கூரத்தில் தங்கும்படி நேர்ந்தது. அப்போது தனக்குத் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளும் காலம் ஸமீபித்துவிட்டதை அறிந்து, உடன் இருந்த புத்ர சிஷ்யர்களுக்கு அர்ச்சிராதிமார்க்கத்தை உபதேசித்துக் கொண்டிருக்கும் போதே ப்ராண

வ்யோகமாகி விட்டது. அதே ஸமயம் சேஷ தீக்ஷித பட்டரும் பரமபதம் அடைந்தார். பிறகு இதனை அறிந்தோர் ஆச்சர்யம் அடைந்தனர். இந்த அர்த்தத்தை,

“வந்தே திம்மய தாதார்ய ஸ்வேச்சயா ப்ராபயஸ்வயம்
அர்திராத்யுபதேசாந்தே வைகுண்ட்டம் பாதசாரத:”

என்று தனியன் பத்யத்துடன் சேர்த்து அனுஸந்திக்கத் தொடங்கினர்.

பிறகு திம்மயாசார்யர் குமாரரான ஸ்ரீநிவாஸ தாதாசார்யரும் ப்ரதி ஸம்வத்ஸரம் பிதாவைப்போல் ஸ்ரீநிவாஸனை ஸேவித்து வந்தார். முதுமையால் மலைக்கு எழுந்தருள முடியாமல் போய் சிஷ்யர்களின் ஸஹாயத்துடன் எழுந்தருளி ஸ்ரீநிவாஸனை மங்களாசாஸனம் செய்து, "இனி மலையப்பனின் ஸேவை அடியேனுக்கு எப்படிக் கிடைக்கும்?" என்று அனுசந்தித்து நிற்க, அப்போது எம்பெருமான் அர்ச்சகமுகேந, "தேவரீர் இருக்கும் இடத்திலேயே நாம் அவதரிக்க ஸங்கல்பம் கொண்டோம். எனவே சோகிக்க வேண்டாம்" என நியமித்தருளவும், ஸ்வாமியும் நாவல்பாக்கம் எழுந்தருளி ஸ்ரீநிவாஸனின் சுபாச்ரயத் திருமேனியை எழுந்தருளப்பண்ணி தனக்கு நியமித்த கோவிந்த தீக்ஷித பட்டர் மூலம் ப்ரதிஷ்டை செய்துவைத்து, காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோவிலில் தீர்த்த பரிக்ரஹம் செய்து ஸகல கைங்கர்யங்களையும் செய்துகொண்டு ஆனந்தப் பரவசர் ஆனார். ஸ்ரீநிவாஸனிடத்தில் இவருக்கு இருந்த அபரிமிதமான பக்தியைப் பின்வரும் இவரது தனியனே காட்டும்.

ஸ்ரீசைலபூர்ண குலவாரிதி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீவேங்கடேச சரணாம்புஜ சஞ்சரீகம் |
ஸ்ரீ திம்மயார்யாய தநயம் விநயைக பூமிம்
ஸ்ரீ ஸ்ரீநிவாஸகுருமந்வஹ மாநதோஸ்மி ||

நாவல்பாக்கத்தில் திருவேங்கடமுடையான் அவதரித்த பிறகு, அவன் திருவடிவாரத்தில் நித்யாராதனம் செய்துகொண்டும் அவன் முகோல்லாஸார்த்தமாக யஜ்ஞாதிகளைச் செய்துகொண்டும் பஞ்சகால பராயணராக எழுந்தருளியிருந்தார்.

இவரது குமாரரான ஸ்ரீவேங்கடதேசிகனின் புண்ய பரிபாகமாக அவதரித்த ஸ்ரீ குமார தாததேசிகன், தம் தகப்பனாரால் உபதேசிக்கப்பட்ட ஸுதர்ஸன மந்த்ரோபாஸனத்தால் அநிதர ஸாதாரண ஜ்ஞாந அநுஷ்டானங்களையும் விலக்ஷண ப்ரஹ்ம தேஜஸ்ஸையும் பெற்றிருந்தார். இவருக்கு, தகுந்த காலத்தில் 'மௌக்திகாம்பா' என்கிற கன்னிகையை வேங்கடதேசிகன் விவாஹம் செய்துவைத்தார். ஸ்ரீகுமார தாததேசிகனும் அது முதல் அக்னி பரிசர்யை செய்துகொண்டும் ரமாநிவாஸனை ஆராதித்துக்கொண்டும் நாவல்பாக்கத்திலேயே எழுந்தருளியிருந்தார். இதைக் குமார தாததேசிகனின் குமாரர் வேங்கடாசார்யர், "சரணாகதி தோரணீ" என்ற க்ரந்தத்தில்,

யோகேந யோகநிவஹைரபி நாத வம்சயா:
த்யாகேன சாபி முகயந்நியமேவ நித்யம்|
கம்பூபமாநகலமம்புஜ வக்த்ர நேத்ரம்
ஜம்பூபுராலயமுபைநி ரமாநிவாஸம் ||

என ஸூசிப்பித்தார்.

இந்தக் குமார தாததேசிகனுக்குப் பத்னிமார் இருவர். அதில் மூத்தவள் பெயர் தெரியவில்லை. இவர்க்குக் குமாரர்கள் எழுவர். அவர்களுள் முதல்வர் நீலமேக தாததேசிகன். இவருடைய பரம்பரையைச் சேர்ந்தவர்களே நாவல்பாக்கத்தில் இருப்பவர்கள். கடைசி குமாரரான வேங்கடாசார்யர், "பாட்ராசார்யர்" எனப்படுபவர். இவரது ஸந்ததியினரே கும்பகோணத்தில் உள்ள பாட்ராசார்யர் வீதியில் இருப்பவர்கள். மூன்றாமவரான ரகுநாதாசார்யரின் ஸந்ததயினர், திருச்சேறை திவ்யதேசத்தில் உள்ள பாட்ராசார்யர்கள். மற்றொரு குமாரரான ஸ்ரீநிவாஸாசார்யரின் வம்சத்தவர்கள், "த்வார்" எனும் ஊரில் உள்ளனர். "ஸச்சரித்ர ஸுதாநிதி" என்னும் தர்மசாஸ்த்ர க்ரந்தத்தைச் செய்தருளியவரும் நைத்ருவ வம்சஸ்தரும் ஸ்ரீ அஹோபில மடத்தில் பதினொன்றாம் பட்டத்தில் மூர்த்தாபிக்ஷித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் சிஷ்யருமான வீரராகவாசார்யர் ஸ்வாமி, மேற்படி ஸ்ரீநிவாஸ தாதாசார்யரிடம் சாஸ்த்ரங்கள் வாசித்ததாகவும் அவர் நியமனப்படியே இந்த க்ரந்தத்தைச் செய்ததாகவும் எழுதியுள்ளார். மற்ற குமாரர்களது வம்சத்தவர்கள் ஆந்திர தேசத்தில் ஆங்காங்கு உள்ளனர்.

நாவல்பாக்கத்துக்கு ஸமீபத்தில், ‘நெடுங்குன்றம்’ என்று ஒரு க்ராமம் உண்டு. அதன் அருகில் உள்ள ‘வேப்பம்பட்டு’ என்ற ஊரில் உள்ளவர்கள் அனைவரும் குமார தாததேசிகனின் சிஷ்யர்கள். அவர்களுள் நாயகர் குலத்தைச் சேர்ந்த நான்கு ஸஹோதரர்கள் இருந்தனர். அந்த நால்வருள், ‘அச்சுத நாயகர்’ என்பவரும் ஒருவர். இவரே பிற்காலத்தில் தஞ்சையை ஆண்டார். அச்சுத நாயகருக்குத் தன் வீட்டில் ஏற்பட்ட மனக்கசப்பால் வீட்டைவிட்டு வெளியேறி நடக்கத் தொடங்கினார். வெயிலாலும் பசியாலும் நீர் வேட்கையாலும் துயர் உற்ற அவர், நாவல்பாக்கம் குளக்கரையை அடைந்து நீர் விடாயைத் தீர்த்துக்கொண்டு மரத்தின் நிழலில் படுத்து உறங்கிவிட்டார். ஸ்வாமி குமார தாததேசிகன், மாத்யாஹ்னிக ஸ்நாநத்திற்காகக் குளத்திற்கு எழுந்தருளும்போது ஒருவன் படுத்து உறங்குவதையும், பெரிய ஸர்ப்பம் ஒன்று தன் படத்தைப் பரப்பி அவன் மீது வெயில் படாதவாறு குடை பிடிப்பதையும் கண்டு வியந்து, கருட மந்த்ரத்தை ஜபித்து ஸர்ப்பத்தை வெளியேறச் செய்து, அச்சுத நாயகன் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்து அவன் துயிலை நீக்கிக் களைப்பையும் போக்கி அவனைப் பற்றி விசாரித்தார். அவன் தம் சீடன் என்பதையும் அவனுக்கு அவன் வீட்டாரிடம் ஏற்பட்ட மனக்கசப்பையும் அறிந்து அவனுக்கு அறிவுரை கூறி மன அமைதி ஏற்படுத்தினார். மேலும் அவனது ஜாதகத்தையும் சரீரத்தில் உள்ள சில உத்தம லக்ஷணங்களையும் ஸர்ப்பம் குடைபிடித்த பாக்யத்தையும் சிந்தித்துப்பார்த்த ஸ்வாமி, அவனுக்கு விரைவில் நல்ல பதவி கிட்டப்போகிறது என்று கூறினார். பின்னர் அச்சுத நாயகரது ப்ரார்த்தனைக்கு இணங்க அவருக்குத் தப்த சக்ராங்கத்தைச் செய்து வைஷ்ணவ தத்வங்களையும் உபதேசித்தார். நாயகரும் ஒரு வருஷகாலம் நாவல்பாக்கத்திலேயே இருந்து பல உபதேசங்களைப் பெற்றார்.

பிறகு அச்சுத நாயகர், ஆசார்யரது நியமனம் பெற்று தஞ்சை சென்று அரச வேலை ஒன்றில் அமர்ந்தார். பூர்வ ஜன்ம புண்ய விசேஷத்தால் பல சோதனைகளிலும் வெற்றி பெற்று மன்னனின் அபிமானத்தைப் பெற்றார். அரசரும் தமக்கு மகன் இல்லாத குறையை எண்ணி அச்சுத நாயகரும் தனக்குப் பழைய பந்து வர்க்கத்தைச் சேர்ந்தவர் ஆதலால் அவரை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டார். இளவரசனாக முடிசூட்டப்பட்டதும், தம் ஸ்வீகாரத் தந்தையான மன்னர் சேவுகப்ப நாயகரை அச்சுத நாயகர் தம் திறமை மிக்க செயல்களால் மகிழச்செய்தார். மன்னர் மறைந்ததும் அச்சுத நாயகர் மன்னராக முடிசூட்டப்பட்டார்.

அச்சுத நாயகர், தாம் தஞ்சை மன்னராக முடிசூட்டப்பட்ட செய்தியை விரைவில் ஆசார்யரான குமார தாததேசிகனுக்குத் தெரிவித்து, அவரையும் அவரது குடும்பத்தாரையும் பல்லக்கில் எழுந்தருளப்பண்ணி நகர வாஸத்தை விரும்பாத ஆசார்யனை வெண்ணாற்றங்கரையில் நீலமேகப் பெருமாள் திருவடிவாரத்தில் நிலையாகத் தங்கச்செய்து ஏராளமான பொருள்களைக் காணிக்கையாக்கினார். அந்தப் பொருள்களின் உதவியால் உத்தம ரித்விக்குகளைக் கொண்டு பலவகையான யாகங்களைச் செய்ய விரும்பிய குமார தாததேசிகன், அவ்வாறே செய்துமுடித்தார். எல்லா யாகங்களிலும் யஜ்ஞபீடத்தில் நீலமேகன் எழுந்தருளி ஹவிர்பாகங்களை ஸ்வீகரித்தது விசேஷம். இதனால் அக்காலத்தில் இருந்த மஹான்கள் ஸ்வாமிக்கு "சதுர்வேத சதக்ரது" என்கிற விருதை அளித்தனர்.

ஸாக்நிசித்ய பௌண்டரீக சர்வப்ருஷ்ட
விஷ்வஜித் த்வாதசாஹே |
வாஜபேய சர்வதோமுகாதிபி:
தாதயார்யமஸ்மதீய தாத அஹமாச்ரயே ||

என்று இந்த ஸ்வாமி செய்த யாகங்களைப் பற்றி அவரது குமாரரே அருளிச்செய்துள்ளார்.

அச்சுத நாயகர் தன் ஆட்சிக்கு உட்டபட்ட பகுதியில் உள்ள எல்லா விஷ்ணு தேவாலயங்களிலும் குமார தாததேசிகனுக்கே முதல் தீர்த்த கௌரவமும், புராண படனம் அருளிச்செயல் மற்றும் வேத பாராயணங்களில் அதிகாரமும் தர்மாதிகாரி பதவி ஆகியவற்றையும் அளித்து, எல்லாம் ஸ்வாமியின் நியமனப்படியே நடைபெறும்படி உத்தரவிட்டார். ஸ்வாமியும் அப்பதவியை ஏற்றுப் பல தேவாலயங்களை ஜீர்ணோத்தாரணம் செய்தும் அவற்றில் உத்ஸவாதிகளும் நித்யாராதனங்களும் குறைவின்றி நடைபெறவும் ஏற்பாடு செய்ததோடு ஆங்காங்குத் தம் குமாரர்களை இருக்கச்செய்தார். தாமும் அவ்வப்போது சென்று மேற்பார்வையிட்டு வந்தார். அச்சுத நாயகனுக்குக் குமார தாததேசிகன் ஆஸ்தான வித்வானாக இருந்து பல கலைகளை வளர்த்தார். மேலும் தற்போது ‘சரஸ்வதி மஹால்’ எனப்படும் நூல் நிலையத்தை விரிவாக்கச்செய்தார். நாயக அரசர் ஆஸ்தானத்தில் தேசிக ஸம்ப்ரதாய ஸித்தாந்தமான ப்ரபத்தியைப் பற்றிக் கந்தாடை சிங்கராசார்யரோடு ஏற்பட்ட வாக்யார்த்தத்தில் மூன்று நாள்கள்

வாதிட்டு ப்ரபத்தி உபாயத்தை ஸ்தாபித்தார். அதனால், "தேசிக ஸித்தாந்த விஜயத்வஜ" என்ற விருதைப் பெற்றார். இதுவும் அவரது தனியனில் சேர்க்கப்பட்டு அனுஸந்திக்கப்படுகிறது.

திருக்குடந்தை ஆராவமுதன் ஸந்நிதியில் கோமளவல்லித் தாயாருக்கு இருந்த தனிக்கோயிலை மாற்றித் தாயாரைப் பெருமாள் ஸன்னிதியிலேயே எழுந்தருளப்பண்ணி அப்பகுதியை தேவதாந்தரத்துக்கு அளித்துவிட்டனர் முன்னிருந்த சைவ மன்னர்கள். நம் குமார தாததேசிகன், மீண்டும் தாயாருக்குத் தனிக்கோவில் ஏற்படுத்தி எழுந்தருளப்பண்ணுவித்தார். இதன் காரணமாகக் கோமளவல்லித் தாயாரின் நியமனப்படி நாயக அரசரும் குமார தாததேசிகனுக்குத் தாயார் ஸன்னிதிக்கு எதிரில் ஸன்னிதி ஏற்படுத்தினார்.

குமார தாததேசிகன் நாவல்பாக்கத்தில் ஸ்ரீநிவாஸன் ஆலயத்தை விரிவாக்கினார். அச்சுத நாயகரது ஜன்மபூமியான நெடுங்குன்றத்தில் ஸ்ரீராமனுக்கு திவ்யாலயம் ஏற்படுத்தினார். அதற்கு அருகில் 'ரகுநாத ஸமுத்ரம்' என்ற க்ராமத்தை ப்ரதிஷ்டை பண்ணி ஸ்ரீராமசந்த்ரனையும் எழுந்தருளப்பண்ணி அவ்வூரை ச்ரோத்ரியர்களுக்கு தானம் செய்வித்தார். நெடுங்குன்றம் கோவிலில், தஞ்சையை ஆண்ட அச்சுத நாயகரது குமாரர் ரகுநாத ராஜாவின் கல்வெட்டும் விஜயநகர மன்னர்களின் சிலா சாஸனமும் உள்ளன. தஞ்சை மன்னர்களும் விஜயநகர மன்னர்களும் உறவினர்களாவர். ஸ்ரீ குமார தாததேசிகன் அவ்வப்போது தாம் செய்த யாகங்களின் ஜ்ஞாபகார்த்தமாக பௌண்டரீகபுரம், ரகுநாதபுரம் முதலிய அக்ரஹாரங்களை ப்ரதிஷ்டை செய்தார்.

“ஸர்வதோமுகம்” எனும் மஹா யாகத்தை தேவாதிராஜன் திருவடிவாரத்தில் ஸ்வாமி அனுஷ்டித்தபோது, ரகுநாத நாயக மன்னர் தமக்கு அளித்த நீல நாயகக் கல் மோதிரத்தை அவப்ருதத்து அன்று யஜ்ஞசாலைக்கு எழுந்தருளிய தேவாதிராஜனுக்கே ஸ்வாமி ஸமர்ப்பித்துவிட்டதாகவும், அக்கல்லைப் பேருளாளன் திலகமாகச் சாற்றிக்கொண்டான் என்றும் பெரியோர் பகர்வர். மேலும் தென்னாட்டில் பல கோவில்களுக்கும் திருவாபரணாதிகளை ஸமர்ப்பித்து அர்ச்சையில் வெகு ஈடுபாட்டுடன் விளங்கினார். நீலகண்ட தீக்ஷிதர் தம் க்ரந்தத்தில், 'ஷட்தர்சன ப்ரவீண குமார தாதாசார்யர்' என ஸ்வாமி திருநாமத்தை எடுத்துளார். இவர் வாஜபேய சத்ர சாமரங்களுடனும் அரச

பரிவாரங்களுடனும் அங்கங்கு சென்று வாதம் செய்து சோழநாட்டில் ஸ்ரீவைஷ்ணவத்தை நிலைநாட்டினார்.

அச்சுத நாயகர் காலம் AD 1572 - 1614 ரகுநாத நாயகர் காலம் AD 1614 - 1633 விஜயராகவ நாயகர் காலம் AD 1633 - 1673. இம்மூன்று மன்னர்கள் காலத்திலும் ஸ்வாமி ராஜகுரு பதத்தை அலங்கரித்தார். இறுதியில் குமார தாததேசிகன் திருக்குடந்தைக்குச் சென்று அனவரதமும் ஆராவமுதனுக்குக் கைங்கர்யங்கள் செய்துகொண்டு பரமபதத்தை அடைந்தார். அம்மஹானின் கைங்கர்யத்தில் பதினொன்றாம் நாளில் அளிக்கப்பட்ட பொருளைக் கொண்டு, “லக்ஷ்மீ நாராயண ஸ்வாமி” என்பவர், ஆராவமுதனின் வாயில் கோபுரத்தைப் பதினோரு நிலைகளுடன் கட்டி முடித்தார்.

குமார தாததேசிகன் அருளிச்செய்த க்ரந்தங்களில் சில:

1. பாரிஜாதாபஹரண நாடகம்,
2. நிக்ஷேபரக்ஷா வ்யாக்யா,
3. ஸ்ரீபாஷ்ய வ்யாக்யா - விசிஷ்டாத்வைத ஸரணி,
4. பஞ்சகால ப்ரதீபிகா,
5. உஷா நிருத்த சரிதம்,
6. ராமாயண கதாஸாரம்,
7. ஸூத்ரகல்ப பாஷ்யம்,
8. வ்யாகரண தீபிகா,
9. கணாத பரிபாடி,
10. கபிலதந்த்ர ஸாரம்,
11. அபயப்ரதானஸார வ்யாக்யா,
12. அச்யுதேந்த்ராப்யுதயம்.

## ஸ்ரீமத் ஸ்வாமி தனியன்

ஸுதர்ஸன க்ருபாலப்த வேத தத்வார்த்த ஸாகரம்|
அநுஷ்டித க்ரது சதம் வந்தேஸ் மக்திபதரம் குரும்||

குமாரதாதயாசார்ய ஸதாசாரபரம் ஸதா |
வேதாந்தாசார்ய ஸித்தாந்த விஜயத்வஜமாச்ரயே ||

ஸ்ரீமதே (அய்யா) குமார தாதயார்ய மஹாதேசிகாய நம:

<u>நன்றி:</u>

**நாவல்பாக்கம் ஸ்ரீ அய்யா தேவநாத தாதாசார்ய ஸ்வாமி சதாபிஷேக மலர்.**

<u>ப்ரதி அருளியமைக்காக அநேககோடி க்ருதஜ்ஞதா ரூப ப்ரணாமங்களுக்கு உரியவர்:</u>

**ஸ்ரீமதுபயவே. திருமலை. சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். வலயபேட்டை. ராமானுஜ தாதயார்ய மஹாதேசிகன்.**




**திருக்குடந்தை ஆராவமுதன் & கோமளவல்லித் தாயாருடன் குமார தாததேசிகன்**



ஸ்ரீ அய்யா குமார தாத தேசிகன்
( வைகாசி - ரோஹிணி )